# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

## அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 11

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 20

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தப்படுவன
   1. உயிரெழுத்துகள்
   2. மெய்யெழுத்துகள்
   3. உயிர்மெய்யெழுத்துகள்
   4. சார்பெழுத்துகள்

2. பேரிலக்கியங்கள் கொண்டிருக்கும் நான்கு உறுதிப்பொருள்களாவன
   1. அறம், பொருள், இன்பம், வீடு
   2. ஊடல், கூடல், இருத்தல், இரங்கல்
   3. போர், வெற்றி, கொடை, வீரம்
   4. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்

3. ஆனவன், ஆகின்றவன் முதலிய சொல்லுருபுகளைப் பெற்றுவருவது
   1. எட்டாம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. முதலாம் வேற்றுமை
   4. மூன்றாம் வேற்றுமை

4. செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ முதலாம் எழுத்து ஒன்றிவரும் அணி
   1. உவமை
   2. மோனை
   3. எதுகை
   4. சிலேடை

5. தமிழில் கலந்துள்ள குசினி என்ற பிரெஞ்சுமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
   1. அங்காடி
   2. களஞ்சியம்
   3. பரண்
   4. அடுக்களை

6. ஈழத்தில் தமிழர் தாயகப்பகுதியில் சிங்கள அரசால் மேற்கொள்ளப்பட்ட முதல் சிங்களக் குடியேற்றம்
   1. கந்தளாய்க் குடியேற்றத்திட்டம்
   2. மாவலி குடியேற்றத்திட்டம்
   3. புல்மோட்டை குடியேற்றத்திட்டம்
   4. காங்கேசன்துறை குடியேற்றத்திட்டம்

7. நடந்தான் என்பதிலுள்ள பகுசொல் உறுப்புகள்
   1. பகுதி, சந்தி, இடைநிலை, விகுதி
   2. பகுதி, மாறுபாடு, இடைநிலை, விகுதி
   3. பகுதி, இடைநிலை, விகுதி
   4. பகுதி, சந்தி, மாறுபாடு, இடைநிலை, விகுதி

8. “இவன் அவ்வீட்டில் உன்னுடனா வாழ்கிறான்?” இச்சொல்லியத்தில் புறச்சுட்டாக வருவது
   1. உன்னுடனா
   2. அவ்வீடு
   3. உன்னுடன்
   4. இவன்

9. யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை முதலில் தன் வீட்டில் தொடங்கியவர்
   1. க. மு. செல்லப்பா
   2. நீதிபதி ஐசாக் தம்பையா
   3. இரா. இரங்கநாதன்
   4. கே.நரசிம்மன்

10. நேற்று கடுமையான பனிப்பொழிவு. தொடருந்துகள் காலந்தாழ்த்தி வந்தன. இச்சொல்லியங்களை இணைப்பதற்குப் பொருத்தமான சொல்
   1. ஏனென்றால்
   2. அப்போது
   3. அதனால்
   4. ஆயினும்

11. வாசலில் நெருப்பு மூளும் என்ற கவிதையை எழுதிய கவிஞர்
   1. நா. முத்துக்குமார்
   2. நாவண்ணன்
   3. காசி ஆனந்தன்
   4. புதுவை இரத்தினதுரை

12. ஏட்டுச்சுவடி என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. ஏட்டு + சுவடி
   2. ஏடு + சுவடி
   3. ஏட்டு + அடி
   4. ஏ + சுவடி

13. சொற்கள் பொருள்படத் தொடர்ந்து வந்து முற்றுப்பொருளைத் தருவது
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. அடைமொழி
   4. சொல்லியம்

14. ஏழாம் வேற்றுமைத்தொகையாக வருவது
   1. ஊர் நீங்கினான்
   2. என் வீடு
   3. பாட்டுப் பாடினான்
   4. மலைக் கோவில்

15. வண்டினம் தேடும் தேன்நிறை மலர்வனம் கண்டேன். இதில் குற்றியலுகரப் புணர்ச்சி பெற்ற சொல்
   1. மலர்வனம்
   2. தேன்நிறை
   3. வண்டினம்
   4. தேடும்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

16. பாடுகின்றோர் எல்லோரும் கவிஞரல்லர். இதில் தத்தம் பொருளுணர்த்தும் இடைச்சொல் இடம்பெற்ற சொல்
   1. அல்லர்
   2. எல்லோரும்
   3. பாடுகின்றோர்
   4. கவிஞர்

17. உழவர் வயலை உழுது பண்படுத்தி, பயிர்களை விளைவித்தனர். இச்சொல்லியம்
   1. கலப்புச்சொல்லியம்
   2. வியப்புச்சொல்லியம்
   3. எதிர்மறைச்சொல்லியம்
   4. தொடர்ச்சொல்லியம்

18. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்றார் பூங்குன்றனார். இதில் தீதும் நன்றும் என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. இணைமொழி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

19. உயிர்க்கொலைத் தடுப்பைக் கருப்பொருளாகக் கொண்டது
   1. சீறாப்புராணம்
   2. இராவணகாவியம்
   3. இராமாயணம்
   4. நளவெண்பா

20. அகம், புறம் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலம்
   1. சங்கமருவியகாலம்
   2. பல்லவர்காலம்
   3. நாயக்கர்காலம்
   4. சங்ககாலம்

21. ஒன்று + வாழை என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்
   1. ஒருவாழை
   2. ஒன்றுவாழை
   3. ஓர்வாழை
   4. ஒற்றைவாழை

22. அவனும் அவளும் என்னுடன் கலைவிழாவுக்கு
   1. வருகிறேன்
   2. வருகிறார்கள்
   3. வருவாள்
   4. வருவான்

23. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
   1. இன்னா நாற்பது
   2. கலம்பகம்
   3. பெரியபுராணம்
   4. அகநானூறு

24. உக்கிறைன் அரசு தன் வீரர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது. அறைகூவுதல் என்பது
   1. அணியம் செய்தல்
   2. ஒப்படைத்தல்
   3. ஆசைப்படுதல்
   4. போருக்கு அழைத்தல்

25. “வான்உறு மதியை அடைந்தது உன் வதனம்” இதில் வதனம் என்பது
   1. அழகு
   2. முகம்
   3. நிலவு
   4. நிறம்

26. தமிழ் மாணவரது உயர்கல்வி விழுக்காட்டைக் குறைப்பதற்காகச் சிங்கள அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம்
   1. தனிச்சிங்களச் சட்டம்
   2. குடியுரிமைச் சட்டம்
   3. கல்வித்தரப்படுத்தல் சட்டம்
   4. பயங்கரவாதத் தடைச்சட்டம்

27. ஒருவருடைய குமுகாய மதிப்பை வரையறை செய்வது
   1. அவரது செல்வம்
   2. அவரது பேச்சு
   3. அவரது அகவை
   4. அவரது சுற்றம்

28. கிழக்கிலிருந்து வீசும் காற்றுக்குத் தமிழர் இட்ட பெயர்
   1. கொண்டல்
   2. கோடை
   3. வாடை
   4. தென்றல்

29. வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் வரும் என்ற பொருளமைந்த பழமொழி
   1. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
   2. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்
   3. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது
   4. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

30. ஐம்பெருங் காப்பியங்களுள் அடங்காதது
   1. மணிமேகலை
   2. வளையாபதி
   3. குண்டலகேசி
   4. சூளாமணி

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. செம்மொழிக்கான தகுதிப்பாடுகளுள் நான்கை எழுதுக.

______________________ ______________________

______________________ ______________________

2. வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது யாது?

______________________________________________

______________________________________________

3. "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற கவிதையூடாக மகாகவி து. உருத்திரமூர்த்தி அவர்கள் எவற்றை விளக்குகிறார்?

______________________________________________

______________________________________________

4. "வரலாற்றுத் திரிபுகளாலேயே இராவண மன்னன் கொடுங்கோலன் ஆக்கப்பட்டார்" இக்கூற்றுத் தொடர்பான உமது கருத்து யாது?

______________________________________________

______________________________________________

5. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.
உருவக அணி: ______________________________

பண்புத்தொகை: ______________________________

6. ஒவ்வோர் எடுத்துக்காட்டுச் சொல்லியம் எழுதுக.
ஏவற்சொல்லியம்: ______________________________

வியங்கோள் சொல்லியம்: ______________________________

7. "பாடு" என்ற வினையடியிலிருந்து தரப்பட்டுள்ளனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.
பெயரெச்சம்: ______________ வினைமுற்று: ______________

தொழிற்பெயர்: ______________ வினையாலணையும் பெயர்: ______________

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

அ. "தமிழன் என்பதில் பெருமை கொள்கிறேன்" என்று தொடங்கி, எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

ஆ. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



இ. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

என்மொழி என்னினம் என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன் - வரும்
புன்மொழி பழியுரை துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ளமாட்டேன் - இந்த
பூட்கையில் ஓரடி தள்ளமாட்டேன்

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

மாந்தர் ஒவ்வொருவரும் தமது ஆற்றல்களையும் அறிவையும் வளர்த்து, தாம் யாரென்பதை நிலைநாட்டுவதற்கு ஏற்ற உடல்வலுவும் உளவலுவும் நிறைந்தது இளமைப்பருவம் ஆகும். அதனாலேயே 'இளமையிலிருந்துதான் முழுமையை வளர்க்க முடியும்' என்று கூறப்படுகிறது. இளையோர் தம்மைப் பண்படுத்தி, தகைமையும் வினைத்திறனும் உள்ளவர்களாக ஆக்க வேண்டிய பொறுப்புக்கு உரியவர்கள். தமது இளமைப் பருவத்தில் வியத்தகு செயல்களைப் புரிந்த பலர் இளையோராகிய எமக்கு வழிகாட்டிகளாக உள்ளார்கள். அவர்களுள் தாய்நாட்டுக்காகத் தம்மையே ஈகம் செய்த பல்லாயிரம் மாவீரர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். அவர்கள் தன்னலம் கருதாது தம் இளமையின் ஆற்றல்களை இனத்தின் இருப்புக்காகத் தந்தவர்கள். அடுத்து, புலம்பெயர்ந்து வளம் நிறைந்த நாடுகளில் வாழ்ந்தபோதும் தமது குடும்பத்துக்காகவும் தாய்மண்ணுக்காகவும் எமக்காகவும் தம் இளமைப்பருவம் முழுவதும் உழைத்த எம் பெற்றோர் எமக்கு வழிகாட்டிகளாக உள்ளார்கள். நாம் இவர்களது வழிகாட்டல்களை ஏற்று நடப்போம். 'உங்கள் மனத்தை உயர்ந்த இலட்சியங்களாலும் எண்ணங்களாலும் நிரப்புங்கள்' என்ற சுவாமி விவேகானந்தர் அவர்களது பொன்மொழியை மனத்தில் இருத்துவோம். எமது இளமைப்பருவத்தை எமக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக்கி, எமது அடுத்த தலைமுறையையும் நெறிப்படுத்துவோம்.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

The Tamil community is deeply committed to preserving its language, arts, and culture.
Even in countries where they have migrated, they continue to uphold these traditions and pass them on to the next generation. Examples of this are Thaipongal and Maveerar Naal (Great Heroes Day). Other races have now come to know and respect Thaipongal and Maveerar Naal, which shows the ingratitude of Tamils. The correct explanations about these should be given to the youngsters. They must explain them to the other races very well. This effort will help sustain and strengthen the Tamil identity on a global scale.

**பிரான்சு:**

La communauté tamoule accorde une grande importance à la préservation de sa langue, de son art et de sa culture. Même dans les pays où ils ont émigré, loin de leur patrie, les Tamouls continuent de préserver ces traditions et les transmettent aux générations futures. Des exemples en sont la fête de Thai Pongal et la Journée des Héros (Maaveerar Naal). Ces célébrations, qui reflètent la gratitude et le caractère reconnaissant des Tamouls, sont désormais reconnues et respectées par d'autres communautés également. Il est essentiel d'expliquer correctement ces traditions aux jeunes générations afin qu'elles puissent à leur tour les expliquer de manière précise aux autres communautés. Cette initiative contribuera à renforcer et à préserver l'identité tamoule à l'échelle mondiale.

**நோர்வே:**

Det er svært viktig for den tamilske befolkningen å bevare sitt språk, sin kunst og kultur. Selv i land hvor de har utvandret og bosatt seg, viderefører de disse verdiene til neste generasjon. Thaipongal og Maaveerar Naal er eksempler på dette. Thaipongal og Maaveerar Naal uttrykker tamilenes takknemlige kultur og blir nå også anerkjent og respektert av andre folkegrupper. Riktig informasjon om dette må gis til de unge, slik at de kan forklare det riktig til andre. Denne praksisen vil bidra til å bevare tamilenes identitet globalt.

**இத்தாலி:**

L'etnia Tamil ha sempre avuto cura nel preservare la propria lingua, arte e cultura. Anche nei paesi dove sono emigrati lasciando la propria patria preservano la loro lingua e la trasmettono alle future generazioni. Esempi di questi ultimi sono il Maaveerar Naal e Thai Pongal. Il Thai Pongal e il Maaveerar Naal rispecchiano la tradizione dei Tamil di non dimenticare la gratitudine e iniziano ad essere riconosciute e rispettate anche da altre etnie. Bisogna fornire una spiegazione corretta di queste cose ai giovani. Loro devono spiegare questi ultimi correttamente alle altre etnie . Questo contribuirà a mantenere le identità dei Tamil in tutto il mondo.

**நெதர்லாந்து:**

De Tamil natie hecht veel waarde aan het behoud van haar taal, kunst en cultuur. Dit wordt ook belangrijk geacht in landen waar mensen vanuit de Tamil natie zijn geëmigreerd. Het wordt van generatie op generatie doorgegeven. Als voorbeeld hiervan wordt Thai pongal en maaverer naal gevierd. De dankbaarheid van Tamils wordt mede door Thai Pongal en maaverer naal herdacht en gerespecteerd door andere naties.
Deze informatie moet goed worden uitgelegd aan de jongeren. Zij moeten dit weer goed uitleggen aan andere naties. Hierdoor worden de kenmerken van de Tamils bekender en vast in de wereld.

**டென்மார்க்:**

Tamiler har stor interesse i at bevare deres sprog, kunst og kultur. Selv i de lande, hvor de på grund af flygtningestrømme fra deres hjemland er blevet immigranter, bevarer de disse elementer og viderebringer dem til de næste generationer. Eksempler på dette er Tai Pongal og Marty-dagen (Maaveerarnaal). Tai Pongal og Marty-dagen udtrykker tamilernes taknemmelighed, og nu begynder folk fra andre etniske grupper også at anerkende og respektere disse begivenheder. Det er nødvendigt at give de unge en korrekt forklaring på disse traditioner, så de kan forklare dem præcist til folk af andre etniske grupper. Denne handling vil sikre, at tamils identiteter bevares globalt.

**சுவீடன்:**

Tamiler är angelägena om att bevara sitt språk, sin konst och sin kultur. Dessa bevaras och förs vidare till nästa generation i länder dit människor emigrerat från hemlandet. Thaipongal och hjältarnas dag, som är ett uttryck för tamilers tacksamhet, erkänns och respekteras nu av människor av andra etniciteter. Den rätta innebörden av dessa måste läras ut till unga. De måste förklara dem ordentligt för människor av andra etniciteter. Detta kommer att vidmakthålla tamilers identiteter över hela världen.

**பின்லாந்து:**

Tamiliyhteisö on syvästi sitoutunut säilyttämään kielensä, taiteensa ja kulttuurinsa. Vaikka he ovat muuttaneet muihin maihin, he jatkavat näiden perinteiden ylläpitämistä ja siirtämistä seuraavalle sukupolvelle. Esimerkkejä tästä ovat Thaipongal ja Maaveerar-päivä. Muut kansat ovat nyt alkaneet tuntea ja arvostaa Thaipongalia ja Maaveerar-päivää, mikä osoittaa tamilien perinteiden merkityksen. Nuorille on annettava oikeat selitykset näistä juhlista, jotta he voivat välittää niiden merkityksen muille kansoille selkeästi. Tämä ponnistus auttaa säilyttämään ja vahvistamaan tamilien identiteettiä maailmanlaajuisesti.

**தமிழ்:**

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம்
2. யாழ்ப்பாணப் பொதுநூலகம்
3. ஆவணக்காப்பும் தமிழினமும்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - வரலாற்றுச் சான்றுகளை ஆவணப்படுத்துதல்
   - அவற்றைக் காக்க வேண்டியதன் அகத்தியம்
   - அவற்றைக் காப்பதில் தமிழரது பங்கு

4. விரைவு உணவுகளால் ஏற்படும் விளைவுகள்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - விரைவு உணவுகளை விரும்புவதற்கான காரணங்கள்
   - அவற்றால் ஏற்படும் விளைவுகள்
   - அவற்றுக்கான தீர்வுகள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தமிழர் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பண்புடனும் சீரிய ஒழுக்க நெறிகளோடும் வாழ்கின்றனர். இத்தகைய பண்பட்ட வாழ்வைச் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரையான இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக விளங்குவது, அவர்களது நிலத்தோடு இயைந்த பண்பட்ட வாழ்வாகும். தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காக வகுத்து, அந்நிலங்களுக்கு ஒழுக்கங்களை வரையறுத்துப் பண்பாட்டின் உயர்நிலையில் வாழ்ந்திருக்கின்றனர். அத்தோடு, தொடர்ச்சியாக அவற்றைப் பேணியும் அடுத்த தலைமுறையினரிடம் கையளித்தும் வந்துள்ளனர். ஈழத்தமிழினம் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் புலம்பெயர் தமிழராக உலகின் எழுபதுக்கு மேற்பட்ட நாடுகளிலே வாழ்ந்து வருகிறது. எனினும், பண்பாட்டுப் பேணலுக்கு முதன்மை கொடுத்து, அதனைத் தம் கடமைகளுள் ஒன்றாகச் செயற்படுத்தி வருகிறது. இதற்கு அவர்களது கூட்டுக்குடும்ப வாழ்வின் பட்டறிவுகள், விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பொறுப்புணர்வு போன்றவை துணையாக இருக்கின்றன. இன்று பல்லினப் பண்பாட்டுச்சூழல், நாகரிகம், பொருண்மிய வளர்ச்சி போன்ற பல்வேறு காரணங்களால் இந்தக் கட்டுக்கோப்பான குடும்பவாழ்வு சிதைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. பெருகிவரும் இனக்கலப்பு, குறுகியகால திருமணமுறிவு போன்றவை எதிர்காலத்தில் தமிழரது பண்பாட்டு வாழ்வைக் கேள்விக்குறி ஆக்கலாம். எமது ஒன்றிணைந்த விழிப்புணர்வு மிக்க செயற்பாடுகள், இத்தகைய விளைவுகளை எதிர்கொள்ளவும் சீரமைக்கவும் துணையாகும்.

1. தமிழரது பண்பாட்டின் அடித்தளமாக விளங்குவது எது? — 1 புள்ளி

____________________

2. தமிழரது பண்பட்ட வாழ்வை எடுத்துக்காட்டுபவை எவை? — 2 புள்ளிகள்

____________________

3. புலம்பெயர்ந்த ஈழத்தமிழரது பண்பாட்டுப் பேணலுக்குத் துணையாக இருப்பவற்றுள் இரண்டை எழுதுக. — 2 புள்ளிகள்

____________________

____________________

4. தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களை எவ்வாறு வகுத்தனர்? — 2 புள்ளிகள்

____________________

5. கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வு சிதைவடையும் நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களுள் இரண்டை எழுதுக. — 2 புள்ளிகள்

____________________

____________________

9 புள்ளிகள்

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து கோட்டில் எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

## தலைப்புகள்:

- கலைப்பட்டறை
- குறும்படப்போட்டி
- கலையக அறிமுகம்
- சிறுவர் உதவித்திட்டம்

அ. ______________________________

தமிழர் வீரக்கலைகளை அறிமுகப்படுத்தும் நோக்கோடு டென்மார்க் பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர் சங்கம் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது. முதலில் ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்ந்து கனடாவிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினரே இணைக்கப்பட உள்ளனர். ஆர்வமுள்ளோர் முற்கூட்டியே பதிவுசெய்யுங்கள்.

ஆ. ______________________________

“கல்விக்குக் கைகொடுப்போம்” என்ற கருப்பொருளோடு பன்னாட்டுச் சிறுவர் நாளை முன்னிட்டு உணவுக் கண்காட்சியும் விற்பனையும் நடத்தப்படவுள்ளன. தமிழரது மரபுவழி உணவுகளுடன் ஐரோப்பிய உணவுகளும் இக்கண்காட்சியில் இடம்பெறும். இன, மத வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம். விரும்புவோர் உங்கள் வரவை முற்கூட்டியே பதிவுசெய்யுங்கள்..

இ. ______________________________

சிட்டு கலையகம் பெருமையுடன் நடத்தும் போட்டி நிகழ்ச்சிக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒளிப்பதிவு, ஒளிக்கலவை, காணொளி ஆக்கம், இயக்கம் போன்றவற்றில் ஆர்வமுள்ளவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம். ஐரோப்பாவின் புகழ்பெற்ற திரையரங்கில் காட்சிப்படுத்தப்படும். வெற்றியாளர் தமிழீழ வரலாற்று ஆவணப்படம் இயக்கும் வாய்ப்பினைப் பெறுவார். பங்குபெற விரும்புவோர் முற்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

3x2 = 6 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |